2018 ஜுன் 26]

திரு. துரைமுருகன்: *அப்படியானால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அறை உங்கள் ஆளுகையின்கீழ்தானே வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் நான் கொடுத்தால், மாண்புமிகு அமைச்சர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, அந்த வசதியைச் செய்து கொடுப்பதில்லை. அந்த வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அந்த அறையில் நான் பார்த்து* restrict *செய்ய வேண்டியிருக்கிறது.*

திரு. துரைமுருகன்: *உங்கள் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். நான் சொல்வதெல்லாம் அவை நடவடிக்கையை* free *ஆக்கிவிடுங்கள் என்று சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் அவ்வாறு அளிக்க வாய்ப்பு இருந்தால் நான் நிச்சயமாகத் தருவதற்குத் தயங்க மாட்டேன். அப்படியொரு வாய்ப்பு எனக்கு இல்லை.*

திரு. துரைமுருகன்: *அப்படி ஒரு நெருக்கடி உள்ளது. அந்த வாய்ப்பை நீங்கள்* create *பண்ணுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதுகுறித்து நீங்கள் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீதிமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் நீங்கள் பேச வேண்டாம். எனவே அதை விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நாம் அடுத்த* agenda–*விற்குச் செல்லலாம். எனவே, நீங்கள் உட்காருங்கள்.*

முற்பகல் 11–40

3. அரசினர் தனித் தீர்மானம்

மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு வரைவு மசோதாவை மாநிலங்களைக் கலந்தாலோசித்து ஒருமித்த கருத்து ஏற்படும்வரை நிறைவேற்றாமல் நிறுத்தி வைக்கக்கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று மதியம் அவை நடந்துகொண்டிருக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*

மத்திய அரசு அணை பாதுகாப்பு மசோதாவைக் கொண்டு வர உத்தேசித்துள்ளதாகவும், அச்சட்டத்தால் தமிழக மக்களின் நலன்கள் பாதிக்கப்படக்கூடும் என்கிற காரணத்தால், மத்திய அரசு இதுசம்பந்தமாக எடுத்துவரும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கக்கோரும் அரசினர் தனித் தீர்மானத்தை பேரவையிலே கொண்டுவர உள்ளதாகத் தெரிவித்து, அதற்கு அனுமதி கோரி, என்னிடத்திலே ஒரு கடிதம் அளித்தார்கள். நான் அவரிடம் நாளைக்கு வினாக்கள்—விடைகள் முடிவுற்றவுடன் இதுசம்பந்தமாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அது இன்றைக்கு இணை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதே பொருள் குறித்து, பேரவை விதி 55–ன்கீழ், அவையிலே விவாதிக்க மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா ஆகியோர் கையொப்பமிட்டு, இன்றைக்கு காலை 9–30 மணிக்கு திரு. சக்கரபாணி அவர்கள் மூலமாக அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்த பின்னர், கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா ஆகியோரில் ஒருவர் தங்களுடைய கருத்துகளைத் தொடர்ந்து தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 2010 ஆம் ஆண்டு வரைவு அணை பாதுகாப்பு மசோதாவைத் தயாரித்து மாநில அரசுகளின் கருத்துகளைக் கேட்டது. இந்த வரைவு மசோதாவில், தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ள அணைகள் அண்டை மாநிலத்தில் இருக்கும்போது அதனை இயக்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக பிரச்சினைகள் ஏற்படும் என்ற காரணத்தால், அந்த வரைவு மசோதாவில் இடம்பெற்ற தமிழ்நாட்டிற்கு பாதகமான அம்சங்கள் குறித்து மறுப்பு தெரிவிக்கப்பட்டு, அவை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள் 29–7–2011 மற்றும் 17–3–2012 ஆம் நாளிட்ட கடிதங்களின் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

2018 ஜூன் 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

எனினும், அந்த வரைவு மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தின் நிலைக் குழுவின் கருத்து வேண்டி அனுப்பி வைக்கப்பட்டது. அத்தருணத்தில், 3–8–2011 அன்று புதுடில்லியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் வேணுகோபால் அவர்களும், நமது பொதுப் பணித் துறை உயர் அதிகாரிகளும் நீர் வள ஆதாரத்திற்கான பாராளுமன்ற நிலைக் குழுவின் தலைவரான திரு. கோகாய் அவர்களை நேரில் சந்தித்து மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்ட மறுப்புக்களை விரிவாக எடுத்துரைத்தனர். மாண்புமிகு அம்மா அவர்களின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு 2010 ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை கைவிட்டது. இருப்பினும், அணை பாதுகாப்பு குறித்து, நாடு முழுவதும் பின்பற்றக்கூடிய ஒரு சட்டத்தை இயற்ற, மத்திய அரசு 2016 ஆம் ஆண்டு ஒரு வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை, தமிழ்நாட்டின் கருத்து கோரி அனுப்பி வைத்தது. இந்த வரைவு மசோதாவை தமிழ்நாடு அரசு விரிவாக ஆய்வு செய்ததில், தமிழ்நாட்டிற்கான பாதகமான அம்சங்கள் கண்டறியப்பட்டன. ஒரு மாநிலத்திற்குள் ஓடுகின்ற நதியின் குறுக்கே அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை அந்தந்த மாநிலமே கட்டிக்கொள்வது குறித்து அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டப்படும் அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் அந்த மாநிலத்திற்கே சொந்தமானவை என்றும், அவை அம்மாநிலங்களாலேயே இயக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வரும் என்றும், இந்த வரைவு மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய அணை பாதுகாப்பு நிறுவனத்திற்கு மாநிலங்களிலுள்ள அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை ஆய்வு செய்யும் அதிகாரங்களை அளிக்க உத்தேசித்திருப்பது, நடைமுறைக்கு உகந்ததாக இருக்குமா எனத் தெரியவில்லை.

மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள்மூலம் ஒரு மாநிலம் வேறொரு மாநிலத்தில் கட்டிய அணைகள், அந்த அணையைக் கட்டிய மாநிலத்திற்குச் சொந்தமானதாகும் மற்றும் அதனை இயக்குகின்ற மற்றும் பராமரிக்கக்கூடிய பொறுப்புகள் அம்மாநிலத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை ஆகும் என்பது உச்ச நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் அணைகள், அண்டை மாநிலமான கேரளாவுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களினால் தமிழ்நாடு அரசால்

கட்டப்பட்டும், இயக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய அணைகள் பற்றிய விவரம் குறித்து இந்த வரைவு மசோதாவில் இடம் பெறவில்லை. மத்திய அரசின் அமைச்சரவையினால் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைவு மசோதாவினால், இந்த 4 அணைகளைப் பராமரிப்பதில் இடையூறுகள் ஏற்படும். உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மற்றும் அணை பாதுகாப்புக் குழு ஆகிய அமைப்புகளினால் அணைகளைப் பராமரிப்பதில் ஏற்படும் இடையூறுகளுக்குத் தீர்வு காண இயலாது. ஒவ்வொரு மாநிலத்திலும் அணை பாதுகாப்பு நிறுவனம் இயங்கி வருகிறது. இவை, மத்திய நீர் வளக் குழுமம் அவ்வப்போது அளித்துவரும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்பட்டு வருகின்றன. மேலும், அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த பொறியாளர்கள், அணை பாதுகாப்பு குறித்த பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முற்பகல் 11–45

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் 11–9–2016 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். இக்கடிதத்தில், இவ்வரைவு மசோதா, மாநிலங்களின் அதிகாரங்களில் குறுக்கீடு செய்கிறது என்றும், மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின்படி, அண்டை மாநிலத்தில் இருக்கும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும் என்றும், எனவே, இந்த மசோதா அவசர கதியில் பரிசீலிக்கப்படக் கூடாது எனவும், அனைத்து அம்சங்களும் விரிவாக பரிசீலிக்கப்பட்ட பின்னரே சட்டம் இயற்றுவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி, 2016 ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவிற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். தமிழ்நாடு அரசு இம்மசோதா மீது தன்னுடைய எதிர்ப்பினைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2018 ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு மசோதாவிற்கு, மத்திய அமைச்சரவை 13–6–2018 அன்று ஒப்புதல் அளித்துள்ளது என பத்திரிகை மற்றும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்த வரைவு மசோதாவின்மீது மத்திய அரசு தமிழ்நாட்டின் கருத்தைக் கோரவில்லை. இந்த வரைவு மசோதாவில், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதிக்கும் அம்சங்கள் இடம்

2018 ஜூன் 26] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பெற்றுள்ளதாலும், குறிப்பாக, அண்டை மாநிலத்தில், தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ள அணைகளான முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றிற்கு பல்வேறு பிரச்சினைகள் இவ்வரைவு மசோதாவால் எழக்கூடும் என்பதாலும், மாநிலங்களைக் கலந்தாலோசித்து, மாநிலங்களின் ஒருமித்த கருத்து ஏற்படும் வரையில், மத்திய அரசு, அணை பாதுகாப்பு சட்டத்தை இயற்றக்கூடாது எனவும், அதுவரையில் மத்திய அமைச்சரவை தற்பொழுது எடுத்துள்ள முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் நான் 15–6–2018 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக்கொண்டேன்.

27–2–2006 மற்றும் 7–5–2014 ஆகிய நாளிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில், தமிழ்நாட்டின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டு, அத்தீர்ப்புகளின்படி 21–11–2014 மற்றும் 7–12–2015 ஆகிய நாட்களில் முதற்கட்டமாக 142 அடி வரையில் அணையில் நீர் தேக்கி வைக்கப்பட்டது. மேலும், மத்திய நீர் வளக் குழுமம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, தமிழ்நாடு அரசு, முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான 152 அடி வரையில் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதன்பொருட்டு, தமிழ்நாடு அரசு செய்து முடிக்க வேண்டிய மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளைச் செய்வதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்காமல், தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. எனினும், தமிழ்நாடு அரசு இவ்விடையூறுகளை நீக்கி, பணிகளை விரைந்து செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், அணை பாதுகாப்பு குறித்து மத்திய அரசு உத்தேசித்துள்ள சட்டத்தை நிறைவேற்றுமானால், அணை பாதுகாப்பு என்ற போர்வையில், முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளைப் பராமரிப்பதில் தமிழ்நாட்டிற்கு இடையூறுகள் ஏற்படும்.

மத்திய அமைச்சரவை 13–6–2018 அன்று இசைவு அளித்துள்ள, 2018 ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவை நிறுத்தி வைக்கவும், மாநிலங்களைக் கலந்தாலோசித்து,

மாநிலங்களின் ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின்னரே, மத்திய அரசு அணை பாதுகாப்புச் சட்டத்தை இயற்றலாம் எனவும், அதுவரையில் மத்திய அரசு, அணை பாதுகாப்புச் சட்டத்தை இயற்ற உத்தேசித்துள்ள நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

தீர்மானம்

"மத்திய அரசு இயற்ற உத்தேசித்துள்ள 2018 ஆம் ஆண்டைய வரைவு அணை பாதுகாப்பு மசோதாவில், தமிழ்நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடிய அம்சங்கள் உள்ளதாலும், குறிப்பாக, தமிழ்நாடு அரசால் அண்டை மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும் என்பதாலும், மாநிலங்களைக் கலந்தாலோசித்து ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின்னரே, மத்திய அரசு அணை பாதுகாப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும் எனவும், அதுவரையில், மத்திய அரசு அணை பாதுகாப்புச் சட்டத்தை இயற்ற எடுத்துள்ள நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும், இம்மாமன்றம் மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது."

இந்தத் தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றித் தரும்படி தங்கள் வாயிலாக இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–50

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம். மத்திய அரசு ஒரு சர்வாதிகார மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்பதற்கு இந்த மசோதாவே ஒரு காரணம். மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்களை கொஞ்சம் கொஞ்சமாக அபகரிக்கிற வேலையைச் செய்து, federal structure of the Constitution–ஐ Unitary ஆக மாற்றுகின்ற வேலையை மத்திய அரசு செய்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதே நேரத்தில், எதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று எனக்கே புரியவில்லை. அணைகளைப் பாதுகாப்பது என்பது அந்தந்த மாநிலங்களுக்குரிய பிரச்சினை. மாநிலங்கள் வேண்டுமானால் அந்த அணையைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்; ஆனால், நாங்கள் பாதுகாத்துக் கொள்கிறோம் என்று மத்திய அரசு சொன்னால், அது எப்படி முடியும்? 'நான் பால் கறக்கின்ற மாட்டுக்கு அவன் எப்படி புல் போடுவான்?' நான் பால் கறக்கின்ற மாட்டுக்கு எப்போது புல் போட வேண்டும் என்பது எப்படி அவர்களுக்குத் தெரியும்? முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக்கொள்கிறோம். அதைப் பாதுகாப்பது வேறொருவர் என்றால் அதை எப்படிச் செய்ய முடியும்? நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கும்போது Baby Dam–ஐக் கட்ட விடமாட்டேன் என்கிறார்கள். Apron–ல் தண்ணீர் போவதற்கும் விடமாட்டேன் என்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் போன்ற அணைகளைப் பராமரிப்பதற்கு என்ன செய்ய முடியும்? இதிலிருந்து சோலையாறு அணைக்கு இன்னும் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இடமலையாற்றில் தண்ணீர் திறந்துவிட்ட பின்னர் மேல்நீராற்றில் தண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மற்ற மாநிலங்களுக்கு எப்படியோ தெரியாது; நம்முடைய மாநிலத்திற்கு இது மிக, மிகப் பெரிய அளவில், பாதகத்தை ஏற்படுத்தும். காரணம், தென் மாவட்டங்களில் இருக்கின்ற முல்லைப் பெரியாறு அணை கேரள மாநில எல்லையில் இருப்பதால் அவர்கள் கையில் இருக்கிறது. அது அவர்கள் கையில் சென்றால், தண்ணீர் வராமல் close ஆகிவிடும்.

அதேபோன்று, கோவை மாவட்டத்தில் PAP–Parambikulam–Aliyar Project–லிருந்து கிடைக்கின்ற தண்ணீரையும் இது close பண்ணிவிடும். இன்னும் சிறிய, சிறிய அணைகள் நிறைய இருக்கின்றன. செண்பகவல்லி அணைக்கட்டு என்பது ஒரு சிறிய dam. அதைக்கூட கட்ட முடியாமல் போய்விடும். நெய்யாற்றங்கரையிலும் இதே போன்ற பிரச்சினை இருக்கிறது.

ஆகவே, மத்திய அரசு மாநில முதலமைச்சர்களையோ அல்லது நீர் வளத் துறை சார்பாக பொதுப் பணித் துறை அமைச்சர்களையோ அழைத்து, அந்தந்த மாநிலங்களில் என்ன பிரச்சினை இருக்கிறது என்று கேட்காமல், புதுடில்லியில் இருந்துகொண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது

என்பது சரியானதல்ல. இதுபோன்ற ஒரு மசோதாவை 13–2–2018–ல் கொண்டு வந்தபோது, அமைச்சரவை அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. உடனே, தமிழ்நாட்டில் இருக்கின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அத்திட்டத்தை கைவிட்டுவிட்டார்கள். அதன் பிறகு, பார்லிமெண்ட்டிலும் இந்த மசோதாவைக் கொண்டு வந்து, விவாதித்தார்கள். பின்னர், அந்த தீர்மானத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பிவிட்டார்கள். அதே மாதிரி, இன்னொரு சட்டத்தையும் கொண்டுவந்தார்கள். அதாவது, அணை பாதுகாப்பை விரும்பும் மாநிலங்கள், அந்தந்த மாநிலச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினால், மத்திய அரசின் அணை பாதுகாப்புச் சட்டம் அந்த மாநிலத்திற்குப் பொருந்தும். அது வேண்டுமென்று கேட்டால்தான் பொருந்தும்; இல்லையென்றால் கிடையாது என்று ஒரு Section இருந்தது. அதை இப்போது கொண்டுவரவில்லை; விட்டுவிட்டார்கள்.

ஆக, ஒரு நாட்டில் இருக்கும் அணைகளையெல்லாம் பாதுகாப்போம் என்று சொன்னால், அது கொஞ்சமும் ஒத்துக்கொள்ள முடியாதது. ஆகவே, இந்தச் சட்டத்தை நிச்சயமாக, nook and corner ஆக நாம் எதிர்த்தே ஆகவேண்டும். மத்திய அரசு, மாநில அரசிடம் கேட்காமல் முடிவெடுக்கும் மனப்பான்மை முதலில் மத்திய அரசிடமிருந்து அகல வேண்டும். இது ஜனநாயக நாடு. எனவே, இன்று இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் ஒருமனதான ஒப்புதலோடு நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், நாம் எத்தனையோ தீர்மானங்களை ஒருமனதாகத்தான் நிறைவேற்றுகிறோம். NEET தேர்வு வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றினோம். எல்லா தீர்மானங்களையும் நிறைவேற்றுகிறோம்; ஆனால், மத்திய அரசு neat ஆக அவர்கள் வேலையை செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆகவே, அவ்வாறில்லாமல், இந்தச் செயல்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும். இது உயிர்ப் பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2018 ஜூன் 26]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், ஒவ்வொரு பிரச்சினையிலும் மத்திய அரசின் தலையீடு இருக்கிறது. மத்திய அரசால் தமிழகத்திற்கு பல கேடுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது. இப்போது ஒவ்வொரு அணையிலும் பிரச்சினை வருகிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசு கொண்டுவருகின்ற இந்தத் திட்டத்தை தைரியமாக இந்த அரசு எதிர்க்க வேண்டும். மத்திய அரசு செய்கின்ற தவறை இந்த அரசு சுட்டிக்காட்ட வேண்டும். இந்த அணைதான் விவசாயிகளின் ஜீவாதாரம். இன்றைக்கு விவசாயிகளின் நிலை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த அணையைப் பராமரிக்கின்ற பொறுப்பை மத்திய அரசு எடுத்துக்கொண்டால், நம்முடைய கதி காவேரி பிரச்சினையில் என்னவாயிற்றோ அதேபோல்தான் இதிலும் இருக்கும். எனவே, இந்தப் பிரச்சினையில் அரசு உறுதியோடு இருந்து செயல்பட வேண்டும் என்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொண்டுவர எத்தணித்துள்ள அணை பாதுகாப்பு மசோதாவில் நமக்குப் பாதகமான பல்வேறு கருத்துகள் இருப்பதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை நிறுத்திவைக்க வேண்டுமென்று வலியுறுத்தக்கூடிய தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். மாநில சுயாட்சி, மாநில உரிமைகளை எல்லாம் பறிக்கக்கூடிய வகையில் மத்திய அரசு தொடர்ந்து செயல்பட்டுவருகின்றது. அதிலும் குறிப்பாக தமிழகத்தை வஞ்சிக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகளையெல்லாம், மக்களே வெறுத்து ஒதுக்கக்கூடிய அளவுக்கு இருப்பதன் காரணமாக இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை தெளிவான முறையில் நிறைவேற்றுவதற்கு முன்மொழிந்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து நம்மை வஞ்சிக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தை*

கண்டிக்கக்கூடிய நடவடிக்கைகளில் நாமெல்லாம் தெளிவோடு ஒருமித்த வகையிலே, ஏகோபித்த வகையிலே ஈடுபடுவதற்கு இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதை நான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைத் துறை தொடங்க வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) இல்லை, இல்லை. தீர்மானத்தில், தனித் தீர்மானத்தில் எல்லாம் இல்லை. விதி 110—ன்கீழான அறிவிப்புக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று கேட்டால் வாய்ப்புத் தருவேன். தனித் தீர்மானத்தில் இல்லை, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

***திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைத் துறை தொடங்க வேண்டியது"*